www.padippakam.com

# வானைக் காட்டுங்கள், சிறகு விரிக்க...



போரில் ஈடுபடுத்தப்பட்ட சிறார்களின் புனைவுகள்

தொகுப்பு:
மனநல மருத்துவர் எஸ். சிவதாஸ்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# வாழ்வும் தெரிவும்

தன்னிகரில்லாத்
தமிழர்களின் வாழ்வும்
இந்த
தாவரத்தின் மிளிர்வும்
தடுமாற்றமில்லா
தேர்ந்த ஒற்றையடிப்
பாதைகளே...

படிப்பகம்

# நம்பிக்கையுடன்...

எதனால் இந்த வாழ்வு
எமக்கே இறைவன்
அருளியது போல
எம் சுவடுகளை தொடர்கிறது

எதனால் இந்த வாழ்வு
என்ன பாவம் செய்தோம்
நாங்களும் மனிதர்களே

வெட்டவெளி மீதினிலே
வெந்த வெளி தரையினிலே
எம் பாதம் பதிக்கையிலே
எங்கள் மனம் வேகிறது
சின்னப் பிஞ்சுகளை நினைத்தே
காய்கிறது

நாங்கள் நடந்துகொண்டு இருக்கிறோம்
எமக்கான மகிழ்வு
நாளை புலரும் என்று.



www.padippakam.com







சிறார்களின் தூரிகையிலிருந்து....





படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com



பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாம்

# வானைக் காட்டுங்கள், சிறகு விரிக்க...

படிப்பகம்

www.padippakam.com

**Vaani Kaaddunkal, Siraku Virikka...**
creations of child recruities

© Dr. S. Sivathas ● Photography & Narration : Dr. S. Sivathas MBBS, MD (psych), Psychiartist, email : sivathas28@gmail.com ● First Edition : 28th February 2010 ● Published by : Mental Health Unit, District General Hospital, Vavuniya ● Supported by : Wanni Psychosocial Forum, Vavuniya ● Design & Printed by : Page & Image, 202/2B, Royal Pearl Garden, Wattala. ● Price : SLR 400/00

**வானைக் காட்டுங்கள், சிறகு விரிக்க...**
போரில் ஈடுபடுத்தப்பட்ட சிறார்களின் ஆக்கங்கள்

© டொக்டர். எஸ். சிவதாஸ் ● ஒளிப்படங்களும் தொகுப்பும் : டொக்டர். எஸ். சிவதாஸ் MBBS, MD (psych) மனநல மருத்துவர், மின்னஞ்சல் : sivathas28@gmail.com ● முதல் பதிப்பு : 28 பெப்ருவரி 2010 ● வெளியீடு : மனநல மருத்துவப் பிரிவு, மாவட்ட பொது வைத்தியசாலை, வவுனியா ● அனுசரணை : வன்னி உள சமூக இணையம் ● வடிவமைப்பும் அச்சாக்கமும் : பேஜ் அன்ட் இமேஜ், 202/2B, ரோயல் பேர்ல் கார்டின், வத்தளை ● விலை : 400/00 இலங்கை ரூபாய்கள்

படிப்பகம்

www.padippakam.com



இது
நம்பிக்கையுடன் பயணிக்கும் என்னருமைச் சிறார்களுக்கு...

படிப்பகம்

www.padippakam.com

## பொருளடக்கம்

சிறார்களின் தூரிகையிலிருந்து - 3
மனவெளிதனில் - 9

கவிதைகளும் ஓவியங்களும் ஒளிப்படங்களும் - 11-83

வானைத் தொடாத மேகங்கள் - 84
விடியலைத் தேடி - 86
டாக்டர் சி. சுதாகரன் அவர்களின் எண்ணங்கள் - 89

படிப்பகம்

www.padippakam.com

## மனவெளிதனில்....

'வானத்தைக் காட்டுங்கள்... சிறகு விரிக்க...' என்ற இந்தத் தொகுப்பின் தலைப்பாக அமைந்த வரிகள், போரில் ஈடுபடுத்தப்பட்ட சிறார்களில் ஒருவரான கதனினுடையது. 'கூட்டில் வாழ்வதற்காகவே சிறகுகள் வெட்டப்பட்டோம்' என்ற என்னுடைய கவிதை வரிகள் மனதில் எழுகின்றன. நம்பிக்கையற்று எரிச்சலூட்டும் எனது வரிகளுக்கு மாறாக தம்பி கதனின் கவிகள் நம்பிக்கையுடன் சமூகத்தை வேண்டி நிற்கின்றன. சிறார்கள் பெரும்பாலும் நம்பிக்கை இழப்பது இல்லை என்பதையே இது காட்டி நிற்கின்றது.



இந்தக் கோட்டோவியம் போரில் ஈடுபடுத்தப்பட்ட சிறார்களில் ஒருவரான சுகிந்தனுடையது. இந்தப் படத்தில் பல பரிமாணங்கள் தெரிகின்றன. இதைப் பார்க்கும் போது

உடைக்கப்படுவது

கை விலங்குகளா... மனத்தடைகளா...

இந்தக் கட்டுடைப்புக்கள், தனிமனினுக்காகவா... சமூகத்திற்காகவா...

என என்னுள் எழுகின்ற சிந்தனைகள் மனதினைக் குலைக்கின்றன. சுகிந்தனது மற்றைய படங்களும் கவித்துவமானவை. இவரைப் போன்றவர்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ளல் மிக முக்கியமானது. அதன் மூலமே இவர்களை ஆரோக்கியமாக சமூகத்தினால் உள்வாங்கிக் கொள்ள முடியும். இவர்களிடம் இருக்கின்ற எதிர்கால நம்பிக்கை அபரிமிதமானது. அது எம்மில் பலரிடம் காணப்படவில்லை. தனிமனிதர்களின் தவறுகளை சாடுகின்ற சமூகம் தனது பங்கினை இலாவகமாக மறுதலிக்கப் பார்க்கின்றது. இந்த மறுதலிப்பின் கட்டுடைப்பைத்தான் தம்பி சுகந்தனுடைய ஓவியம் எம்மில் ஓங்கியறைகின்றதோ...? தனக்கு ஒரு தூரிகை வாங்கித் தருமாறு சுகிந்தன் கேட்டுக் கொண்டான். அதனை கொழும்பிலிருந்து பெற்றுக் கொடுத்தேன். மாத்திரைகள் மட்டும் வழங்கும் நடைமுறைகள் தகர்க்கப்பட்டன.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் மனநலப்பிரிவில் சேவையைப் பொறுப்பேற்ற பின் போரில் ஈடுபடுத்தப்பட்ட 450 இற்கும் மேற்பட்ட சிறார்களைக் கொண்ட பூந்தோட்டம் முகாமிற்கு அடிக்கடி சென்று வருவது வழக்கம். இந்தச் சிறார்களைவிட 18 வயதுக்கு மேற்பட்ட முன்னாள் போராளிகள் எனப்படுபவர்களில் சுமார் 10,000ற்கு மேற்பட்டவர்கள் வவுனியா மாவட்டத்திலுள்ள உள்ள 14 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களது முகாம்களில் பணியை ஆரம்பித்தபோது 'மனநோய்க்குரிய சிகிச்சைகளை மட்டும் வழங்குவதை விடுத்து அவர்களுடன் ஒன்றாக கூடிக் கதைக்க வேண்டிய தேவை என்ன?' என இராணுவ அதிகாரிகள் வினாவினார்கள். என்னுடைய சேவையை மனதார அங்கீகரிக்கத் தயங்கினார்கள். ஆனால் இவற்றுக்கு எல்லாம் எதிர்மாறாக போரில் ஈடுபடுத்தப்பட்ட சிறார்களின் முகாம் பொறுப்பதிகாரி என்மீது முழு நம்பிக்கை வைத்ததன் விளைவாக இந்த அரிய நூல் வெளிவருகின்றது. அச்சிறார்களுக்கு உதவுவது என்பதையும் விட எனக்கு இப்பணி பல வழிகளில் மனநிறைவையும், மகிழ்வினையும் தந்தது என்றால் மிகையாகாது.



படிப்பகம்

ஒரு நாள் நான் வெளிநோயாளர் பிரிவில் கடமையில் இருக்கும் போது இந்த முகாமின் பொறுப்பதிகாரி மேஜர் வீரசேகர ஓடி வந்து 'முகாமில் பேய் வந்ததாக சிறார்கள் பயப்படுகிறார்கள், ஒருவர் பின் ஒருவராக மயங்கி விழுகிறார்கள், நீங்கள் வந்து ஒருமுறை பார்க்க வேண்டும்' என்றார். உடனடியாகவே அவருடன் பூந்தோட்டம் முகாமிற்கு சென்றேன். அவர்களுடனான இந்தச் சந்திப்பே எனது முதலாவது சந்திப்பு. ஒரு பெண் அந்த முகாமில் உள்ள சவுக்கு மரத்தடியில் மயங்கி விழுந்திருந்தாள். அதுவே பேய் அடித்து விட்டது என்று பலரும் பயப்படும்படி ஆயிற்று. அதனைத் தொடர்ந்து முகாமில் உள்ள இருபதுக்கு மேற்பட்ட பெண்கள் மயக்கமுற்றிருந்தனர். இது முகாம் முழுவதும் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியிருந்தது. முதலில் பூசாரியினைக் கொண்டு கையாள முற்பட்ட பொறுப்பதிகாரி பின்னர் அது சாத்தியமாகாத போது என்னிடம் வந்தார். நான் அவர்களிடத்தில் மெல்ல மெல்ல நம்பிக்கையை ஊட்டி அந்தப் பயத்தினை அகற்றினேன். சில நாட்களில் அத்தகைய எல்லா செயற்பாடுகளும் முற்றாக அற்றுப் போயின. இது என் மீது எல்லோருக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தியது. இந்தச் சிறார்களுடன் நெருக்கமாக பழகுவதற்கு இந்தச் சம்பவம் ஏதுவாக அமைந்தது. விருப்பமில்லாத ஒன்றினுள் பலவந்தமாக இணைக்கப்பட்டு செய்யாத ஒன்றுக்காகத் தண்டனை பெறும் நிலைக்கு வந்திருப்பதாக அவர்களில் பலர் எனக்கு தெரிவித்தனர். இந்த முகாமின் பொறுப்பதிகாரிகள் அங்குள்ள சிறார்களின் திறமைகளை விபரித்து அவர்கள் வரைந்த ஓவியங்களையும், எழுதிய கவிதைகளையும் காட்டினர்.

அவை என்னுள் பல அதிர்வுகளைத் தந்தன. இந்த அதிர்வுகளின் தொடர்ச்சியாகத்தான் இந்த நூல் வெளியாகின்றது. ஒரு நாள் தம்பி கதன் என்னிடம் தனது கவிதைகள் எல்லாவற்றையும் தொகுத்துத் தந்து 'நான் விபுலானந்தர் பிறந்த காரைதீவினை பிறப்பிடமாக கொண்டவன், நான் கவிஞனாக மிளிர வேண்டும், இவற்றைப் பிரசுரிக்க நீங்கள் உதவ வேண்டும்' என வினயமாகக் கேட்டுக் கொண்டான். மேலும் பலர் ஓவியங்களை காட்சிக்கு வைக்குமாறும் தங்களுக்கு இசைக்கருவி வாங்கித் தருமாறு கேட்டனர். இவற்றுக்கு ஆவன செய்வதாக கூறிவிட்டு வந்தேன். மெல்ல மெல்ல எனது பணி இவர்களது நலனை மையமாகக் கொண்டு செயற்படத் தொடங்கியது. அதற்கு வளமாக சர்வதேச சிறுவர் தினத்தை பயன்படுத்திக் கொண்டேன். 'வானவில்' என்ற பெயரில் ஓவியக் கண்காட்சியினை ஏற்பாடு செய்திருந்தேன். அதில் போரில் ஈடுபடுத்தப்பட்ட சிறார்கள் மட்டுமல்லாமல், இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் சிறார்கள் மற்றும் சிறுவர் காப்பகங்களில் வாழும் சிறார்களினுடையவை என நூற்றுக்கு மேற்பட்ட ஓவியங்களும், என்னால் முகாம்களில் எடுக்கப்பட்ட சிறார்களின் ஒளிப்படங்கள் சிலவற்றையும் காட்சிப்படுத்தினேன். இது பலருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அத்துடன் எமது நடவடிக்கைகளுக்கான அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றதுடன் என்னுள் எதிர்காலம் பற்றி நம்பிக்கையையும் விதைத்தது. அந்த ஒளிப்படங்களில் சில இந்நூலில் இடம்பெறுகின்றன. அவற்றுக்கு இசைவான சிறார்களின் கவிதைகளும் இடம்பெறுகின்றன. எமது அந்த நிகழ்விற்கான அழைப்பிதழ் கூட போரில் ஈடுபடுத்தப்பட்ட சிறார்களின் ஒருவனது வண்ண ஓவியத்திலேயே அமைந்திருந்தது. அந்த ஓவியமும் கூட இந் நூலில் இடம்பெற்றுள்ளது.

இந்த நூல் அவர்களின் பல விதமான உணர்வுகளையும் தாங்கி வருகிறது. அவர்களின் திறமைகளை வெளிக்காட்டுவதுடன் இவர்களுக்குரிய அங்கீகாரத்தை சமூகத்தில் பெற்றுக்கொள்வதே எமது நோக்கம். அவர்களின் எதிர்காலம் சுபீட்சமாக அமைவதோடு எமது எதிர்காலக் கலைஞர்களாக அவர்கள் மிளிர வேண்டும் என்பதும் இந்த தொகுதியின் நோக்கமாகும். எனவே இதனை குறுகிய அரசியல் ஆதாயத்தைத் தேடும் நோக்கத்தோடு இதனை பயன்படுத்த வேண்டாம் என அன்புடனும் வினயமாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த முகாமிற்கு செல்லுகின்ற போது பலர் என்னிடம் சொல்லுகின்ற முறைப்பாடு இவர்களில் பலர் காதல் கடிதங்கள் எழுதுகிறார்கள் என்பது. நான் இவர்களிடம் 'இது சாதாரண வெளிப்பாடு தான், இவர்கள் இலகுவாக சமூகத்தினுள் உள்வாங்கப்படக்கூடியவர்கள் என்பதற்கு இதுவே நல்ல அறிகுறி' எனக் குறிப்பிடுவேன். அதனை புரிந்து கொள்ள வேண்டும். காதல் கடிதங்கள் குற்றமானவையல்ல. அவற்றை நகைப்புக்கிடமானதாக கருத வேண்டாம். அதற்காக காதல் கடிதங்களை வலிந்து ஊக்கப்படுத்தி உள்வாங்க வேண்டியதுமில்லை.

பின்னர் திடீரென எடுக்கப்பட்ட ஒரு முடிவால் இந்த சிறார்கள் படிப்படியாக இரத்மலானை இந்துக்கல்லூரிக்கு அனுப்பப்பட்டார்கள். கடைசியில் செல்லும் குழுவினை சந்திந்த போது 'நீங்கள் கொழும்பில் வந்து எங்களைத் தொடர்ந்து பார்க்க வரவேண்டும்' என்று பலர் உரிமையுடன் கேட்டது மீண்டும் அவர்களின் நலனில் ஈடுபடுவதற்குரிய ஊக்குவித்தலைத் தந்தது. இந்தச் சிறார்கள் விரைவாக சமூகத்திற்குள் மீள உள்வாங்கப்பட வேண்டும் என்ற என்னுடைய நிலைப்பாட்டிற்கு எதிராக இந்த இடமாற்றம் அமைந்திருந்த போதும், சிறார்களின் அன்பான வேண்டுகோளை புறம் தள்ள முடியவில்லை. அவர்களின் நலனை அறிவதற்காக இரத்மலான இந்துக் கல்லூரிக்கு சென்றதும் 'எங்கட டொக்ரர் வந்து விட்டார்' என்று பலரும் ஓடி வந்தது என்னுள் விபரிக்க முடியாத உணர்வினை ஏற்படுத்தியது. குறுகிய காலத்தினுள் சில நூறு குழந்தைகளின் தந்தையும், தாயும், நண்பனுமான உணர்வு எனக்கு ஏற்பட்டது. இந்த குழந்தைகளிடமிருந்த நம்பிக்கை, நேர்மை, உற்சாகம் ஆகியவை பல தடவைகளில் என்னை வியப்படையச் செய்கின்றன. சிறார்களுக்கான பணியில் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் அசாத்தியமானது. அண்மையில் பூந்தோட்டம் முகாமிற்கு நான் சென்ற போது அதன் பொறுப்பதிகாரியாக இருக்கும் மேஜர் வீரசேகர கூறியது இன்னும் என்னுள் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. 'முன்னர் நாம் இவர்களை எதிரிகளாகக் கருதி வேட்டையாடினோம், ஆனால் இங்கு வந்த பிறகு இவர்கள் என்னை தந்தை போல நினைப்பதால் இவர்களின் நலன் எனக்கு முக்கியமானதாக தெரிகிறது. இந்தச் சிறார்கள் எதிர்காலத்தில் எங்கள் பிள்ளைகளுடன் யுத்தத்தில் ஈடுபடக்கூடாது என்பதே என் விருப்பம்' என்றார். நானும் 'எல்லோரும் சம உரிமையுடன் வாழக்கூடியதாக இருக்குமானால் அது சாத்தியமாகும்' என்று புன்னகையுடன் கூறினேன்.

ஒரு இராணுவ அதிகாரி இவர்களை ஏற்றுக் கொள்ளும் போது சமூகமும் இவர்களை ஏற்றுக்கொள்வதென்பது மிகவும் அவசியமானதல்லவா?. காலில் துப்பாக்கிச் சன்னத்தால் ஏற்பட்ட சீழ் வடியும் காயத்தைக் காட்டினாள் ஒரு சிறுமி. அதற்கு மருத்துவ வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தேன். அது போன்ற உடற் காயங்கள் ஆற்றப்படும் அதே சமயத்தில் அவர்களின் மனக்காயங்களும் ஆற்றப்படவேண்டும். அவர்களைப் புரிந்து அவர்களுக்குரிய சரியான அங்கீகாரத்துடன் சமூகத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும். அதை எமது சமூகம் செய்யுமா...? அந்த சமூக இணைப்பு மனக் கறைகளுக்கு அப்பாலான அங்கீகாரத்துடனானதாக அமைதல் வேண்டும்.

அண்மையில் இரத்மலான இந்துக் கல்லூரிக்கு சென்றபோது சிறுவன் ஒருவன் எனக்கு ஒரு கடித்தைத் தந்தான். 'அன்பின் மருத்துவர் ஐயா அறிவது.. மனதில் கவலைகள் இருந்தாலும் இங்கு இருப்பவர்களின் அன்பால்... குறிப்பாக அதிபர் ஆசிரியர்களின் ஆலோசனைகளால் சந்தோஷமாக இருக்கின்றேன். நீங்கள் அடிக்கடி எங்களை வந்து சந்தித்துக் கதைக்க வேண்டும். உங்கள் ஆலோசனைகளைக் கேட்க விரும்புகின்றேன்.' என அக்கடிதம் கேட்டுக் கொண்டது. தைப்பூசத் திருநாளை அப்பாடசாலையில் ஏற்பாடு செய்வதற்கு அங்கு சென்றிருந்தபோது சிறுவர்களைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் எனக்கு மறுக்கப்பட்டது. 'நீங்கள் வவுனியா மாவட்டத்தின் மனநல மருத்துவ நிபுணராக இருப்பதனால் இங்கு உங்களுக்கு சேவை செய்ய வேண்டிய தேவை இல்லை. ஏனெனில் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர் அதனைக் கவனித்துக் கொள்வார்.' எனக் கூறப்பட்டது. என்னுடைய பணி மனநோய்க்கான சிகச்சைகளுக்கும் அப்பாற்பட்டது என நான் விளக்கியதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும், அதிபர் ஆசிரியர்களின் உதவியுடன் தைப்பூச தினத்தன்று பொங்கல் விழா ஒன்றினை ஒழுங்கு செய்து, அந்தச் சிறார்கள் பொங்கிப் பரிமாறிய பொங்கலை ருசித்து அந்நிகழ்வில் கலந்து கொண்டேன். ஆலயங்களுக்கு செல்ல அனுமதி தேவையில்லையே...!

www.padippakam.com

இந்நூலில் வருகின்ற இன்னொரு கவிதை
'மொட்டொன்று உருவாகி
மலர்வதற்கு முன்னே
மரம்பட்டுப் போனதையிட்டு...'

என வருகிறது. ஒரு சிறுமியின் இந்த வரிகள் நெஞ்சைத் தொட்டு நிற்கின்றது. அந்தக் கவிதைக்கு பிரதிபலிப்பாக என்னுடைய கவிதை ஒன்றினைத் தருகின்றேன்.

'வெட்டி வீழ்த்தப்பட்டாலும்
பட்டுப் போய் விட மாட்டோம்.
வேர்களிலிருந்து அரும்புவோம்'

இந்தத் தொகுப்பு சிறார்களின் உணர்வுகளை மட்டுமல்ல என்னுடைய உணர்வுகளையும் கொண்டிருக்கின்றது. இத்தொகுப்பில் இடம்பெறுகின்ற ஒளிப்படங்கள் யாவும் இக்காலப் பகுதியில் வன்னியில் என்னால் எடுக்கப்பட்டவை. அவற்றுக்கு இசைவான கவிதைகள் சிறார்களுடையவை. வானத்தை காட்டுங்கள், சிறகு விரிக்க.... என்னும் இந் நூலின் கவி வரிகளின் வடிவங்கள் கவிதைகளா...? இல்லை மனங்களின் சிறைகளா...?

இந்தச் சிறார்களின் நலம் பேணுவதில் அக்கறை காட்டிய வவுனியா மாவட்ட நீதிபதி அலெக்ஸ் ராஜ், மற்றும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் ஆகியோர் இங்கு பெருமையுடன் நினைவுகூரத் தக்கவர்கள். இம்முகாம்களின் நிரவாகத்துடன் ஏதோ ஒரு வழியில் தொடர்பு கொண்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், வவுனியா மாவட்ட வைத்தியசாலை, சமூக மேம்பாட்டு நிறுவனங்கள் போன்றனவும் குறிப்பிடத் தகுந்த பணியை ஆற்றி வருகின்றன என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இந்நூலினை வெளியிடுவதற்குரிய செலவின் பெரும் பகுதியை வழங்கிய இங்கிலாந்தின் சிறுவர் மனநல மருத்துவ நிபுணர் திருமதி சாந்தி பரமேஸ்வரன் குடும்பத்தினரும் முன்னாள் விரிவுரையாளர் அமரர் மருத்துவர் மகாதேவா (EX Lecturer Pharmacology Charing Cross Hospital, London ) குடும்பத்தினரும் எமது நன்றிக்குரியவர்கள்.

மனவெளிதனில் வியாபிக்கும் இந்த எண்ணங்களை ஒரு சிறுவனின் கவிதையுடன் நிறைவு செய்கின்றேன்.

வளர்பிறை நாங்கள் வழி காட்டுங்கள்
சிறுவர்கள் எமக்குச் சிரிப்புக் காட்டுங்கள்
நல்ல பாதைகளை எங்கள் வழியில்
தினமும் காட்டுங்கள்
மணம் வீசும் பூக்கள் நாங்கள்
தினம் மலர்வு கொள்கின்றோம்
உங்கள் ஒளியின் வழியில்
நாங்கள் நின்று உயர்வு கொள்கின்றோம்.

**மனநல மருத்துவர் எஸ். சிவதாஸ்**
தலைவர், வன்னி உள சமூக இணையம்

மனநலப் பிரிவு
மாவட்ட பொது வைத்தியசாலை
வவுனியா.
*தை 2010*



படிப்பகம்

www.padippakam.com




# என் உயிர்த் தமிழே

தமிழ் என்ற சொல்லிற்கு
தரணியில் நிகரில்லை
தாயின் வடிவத்தை
தமிழே தந்திடும்
ஏராள மொழிகள் இங்கு
இருப்பினும் -இம்
மொழி போல் எங்கும்
காண்பது அரிதே

எத்தனை மொழிகள்
நான் பார்த்த போது
இம்மொழி பார் பெற்ற
இன்பமொழி யன்றோ

எழுது எழுது தமிழுக்கு எழுது
எல்லையற்ற
என் தாய் மொழிக்கு
எழுது ஓர் கவி

●



படிப்பகம்

www.padippakam.com



# கவி உலகம்

கோடுகளாய் உருவாகும்
நடனங்கள்
அந் நடனங்களாய் உருவாகும்
கவிதைகள்
கவிதைகளால் உருவாகும்
உண்மைகள்
அதுவே என்றும் உலக
உயிர்மைகள்.

●



படிப்பகம்

www.padippakam.com



# வேதனைகள் தனை மறந்து

நீள்வான வெளியில்
தவழும் நிலவு
வானெங்கும் ஒளி வீசி
பரந்திடும் பொழுது
தொலை தூர இசை கேட்டு
தொலைந் தோடும்
வயல் ஓர ஆட்காட்டி
நிலவின் மகிழ்வுக்காய்
மலரும் முல்லை
மகிழ்ச்சியின் உச்சத்தால்
மலரும் பிள்ளை
காலத்தின் நற்காலம்
இராக்காலம் என்று
நயந்திடும் மாந்தர்
வேதனை தனை மறந்து
உறங்கிடுவார் இன்று

●



படிப்பகம்

www.padippakam.com



# வாழ்க்கைப் போராட்டம்

பாதைகள் நீண்டு கொண்டே போகலாம்
பயணங்கள் தொடர்ந்த வண்ணம் ஆகலாம்
தியாகங்கள் நடந்து கொண்டே இருக்கலாம்
வாழ்க்கைப் போராட்டம் இணைந்தவண்ணமாகலாம்
சான்றோர் தாழ்த்தி உன்னை கதைக்கலாம்
உன்னை நீ நம்பு
உன் உயர் மனதைச் சிறையில் அடைத்து
தூய மனதை வளரவிடு
தெளிவாய் தெரியும் உன்
பயணத்தின் முடிவு
கலக்கம் கொள்ளாதே
உன் இலக்கில்

●



படிப்பகம்

www.padippakam.com



## நட்புக்காக

இனிய ஒரு இராப்பொழுது
ஒளி மழையை அள்ளி வீசும் பால் நிலவு
சில்லென்று மேனி தழுவும் மெல்லிய காற்று
காலமாக நடக்கிறேன்
கனத்த உன் நினைவுகளுடன்
அன்று நீ அருகிலிருந்த – அகலாத
நினைவுகள் என் மனதில் அழகாய் விரிய
அகன்ற அவ் அண்ட வெளியை
என்னால் அளக்க முடியவில்லை
என் உள்ளமதைப் போலவே
எண்ணிப் பார்க்கும் போது – சற்று
நிம்மதிப் பெருமூச்சு எனக்குள்ளே.

●



படிப்பகம்

www.padippakam.com



# புதுவாழ்வைத் தேடி

புத்துயிர் பெற்றிருக்கும் எமக்கு புதுவாழ்வை வாழ
வழிகாட்டுவாராக
உயிரூட்டும் உருவங்களாக நாமிருக்கின்றோம்
இன்று -அதற்கு உயிரூட்ட வருவீர்களா
நிஜமானவர்களே
வெற்றியின் படிக்கற்களோ- நாங்கள்
புத்தியின் சிறப்பினால் ஆக்கியுள்ளோம்
கரைந்திடும் கானக்குயில் கூடக் காதோரம்
வந்து எமக்காகக் கானம் இசைக்கிறது
தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்த எமக்கு
தாகம் தீர்க்கும் நீராகத் தோழரே நீர் வருவீரே
பூந்தளிர்களாக மலர்கின்றோம் தினம் இங்கு
பூந்தோட்டப் பாரினிலே
பரிதவிப்பாக வாழும் துன்பம் கொண்ட எமக்கு
பசுமை வீசும் பட்டொளியாக வருவீரா
எம்மவரே
காலங்கள் எல்லாம் எமக்குக் கனிவாக மாறும்
கல்வி கூட எமக்கு வழிகாட்டுமென நம்புகிறோம்.

●



படிப்பகம்

www.padippakam.com

# நாங்கள் சிரிப்போம்



மகிழ்வான பொழுது
இது
சிரியுங்கள்
சோகங்கள் எமக்கு சொந்தமல்ல
ஆண்டவர் அருள்
அமைவாக எமக்கு
வேதனைகளை நாங்கள்
சுமந்தாலும்
வேட்டொலிகளை மறந்தே
வாழ்கிறோம்
பூங்காவன மேடையில்
பூக்களாய் உயிர்க்கிறோம்
ஆயிரம் கனவுகளுக்கும்
அடிமையாகிக் கொள்கிறேன்
இவர்கள் அன்பினால்
நாங்கள் சிற்பங்கள்
அல்ல
சிற்பிகளே.

●



படிப்பகம்

www.padippakam.com

# தைப்பொங்கல்

உவர்ப்பு நீர்
அருந்தியபின்
நாசுவைக்கும் தேனாய்
தொட்டால் சிவக்கும்
சிறு குழந்தை மேனியாய்
பட்டாசுகள்
படபடக்க
பட்டுச்சட்டைகள்
சரசரக்க
பண்பு மொழி பேசியே
பவனி வரும்
இன்பொங்கல்
தானியங்கள்
பல சுவைத்து
பல பழவகைகள்
இரையாக்கி
தோற்றுப் போகும்
நாவிற்கு
மறுநாள்
பட்டிப் பொங்கல்
பசு பாட்டிசைக்க
வைக்கும் நாவை

●





படிப்பகம்

www.padippakam.com

# நாங்கள் சிறுவர்கள்



எங்கள் விழிகளில்
வேண்டாம்
கண்ணீர்த்துளிகள்
புரிந்து கொள்ளுங்கள்
நாங்கள் சிறுவர்கள்

நூல் அற்ற மெழுகுவர்த்தியாய்
நாங்கள்
எரிந்து கொண்டு இருக்கிறோம்
நாங்கள் ஒளிர வேண்டும்
புரிந்து கொள்ளுங்கள்
நாங்கள் சிறுவர்கள்

முதுமைகளே
உண்மை கொண்டு
திறந்து பாருங்கள்
உங்கள்
இளைய பருவமதை
புரிந்து கொள்ளுங்கள்
எங்களை
நாங்கள் சிறுவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# சிறகு விரிக்க

உணவுப் பசியாலும்
உயிர்ப் பசியாலும்
இறந்து கொண்ட
நாட்கள்
மலைகளா கமட்டும்
நாங்கள் அன்று..

நடமாடும் மனிதர்களாக
உருக்குலைந்து
இருக்கிறோம் – எம்
இரத்தங்களும்
தசைகளும்
எங்களுடன் இல்லை
நாங்கள்
தவசிகளாகிச் சிரிக்கிறோம்
வரையப்பட்ட
வாழ்வினில்
விடி வெள்ளியாக

வானைக் காட்டுங்கள்
நாங்கள் சிறகு விரிக்க
இன்று.

●





படிப்பகம்

www.padippakam.com

# தேநீர்

உற்சாக
சுவைதனில்
உப்பு உவர்க்கவில்லையா?
முதுகில் கூடை சுமக்கும்
தாய்மைகளின்
வியர்வை மணக்கவில்லையா?
கொழுந்துகளை
கொழுந்துகள்
பசி தீர்க்கிறது.

●



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# மழலையின் பார்வை

மொட்டொன்று உருவாகி
மலர்வதற்கு முன்னே
மரம் பட்டுப் போனதையிட்டு
மகிழ்வின்றிக் கண்ணில்
கனல் வந்து மோத தன்
நிலை மறந்து பார்க்கின்றது குழந்தை

இது
இரத்தத்தைப் பாலாக்கி
கருவில் தனை உருவாக்கிய
தாயை நோக்கிய நினைவுப் பார்வை
முத்துக்கள் பிறக்குமிடம்
முத்தான தத்தைதோள்
சொட்டிட்ட குருதியையிட்டு
சுருங்கிடும் வழிக்கான பார்வை

பல வண்ணப் பட்டாடை தனை
போட்டு மகிழ்வித்த சகோதரர் இல்லாத
தனிமைப்பார்வை இது
பார்வையல்ல பரமரகசியம்
தூண்டில் பட்ட மீன் போல
துடிக்கும் பிள்ளையின் பாசப் பார்வை

துள்ளித்திரியும் புள்ளிமான் – காலில்
முள் குத்தினாலே சுருண்டு படுக்கும் குழந்தை
மனதில் முள் குத்தியதையிட்டு
மகிழ்வின்றி பார்க்கின்றது
மகிழ்ந்திருந்த காலத்தை மழலை
கண்ணில் பார்க்கின்றது

●



படிப்பகம்

www.padippakam.com

## பட்ட மர நிழலில்

உறங்க மறுத்த
விழிகள்
உணர்வற்று இருக்கின்றது
ஊமைப்பசிக்கு
உணர்வுப்பகிர்வுகள்
உருகிய கண்ணீர்கள்
பன்னீர்களாய் மட்டும்
உறங்குகின்றோம்
நாங்கள்
பட்டமரநிழலில்
பசுமரத்தாணியாய்
மகிழ்வுகள்
இருப்பினும்
பசுமைகள் இல்லை
பாலின் முலை
பக்கத்தில் இல்லை.

●



படிப்பகம்

www.padippakam.com



# அன்புத்தாய்

பரீட்சை எழுதிய பேனா இன்று முதல் முதலாக
கவிதை எழுத ஆசைப்படுகிறது
சோகங்கள் என்னைச் சூழ்ந்த போதும்
சந்தோசம் சமாதியான போதும்
துணையாக நின்றாயே தாயே.
காலங்கள் ஓடிய போதும்
கலங்காமல் நின்று என் வாழ்வில்
வசந்த காலத்தைத் தந்தாயே
ஈர்ப்புக் கூடியது சூரியன் என அறிந்தேன்
அதை விட ஈர்ப்புக் கூடியது
உன் பாசம் தான் தாயே
கரையில்லாக் கடலாகவும்
முடிவில்லா வானமாகவும்
உன் அன்பை நான் உணர்ந்தேன்
குருதியை மெழுகாக்கி எனைக்
கல்வி கற்க வைத்தாயே தாயே
இப்போதும் நீ எங்குள்ளாய்
என்னைவிட்டு உலகை விட்டு எங்கு
சென்றாய் தாயே

●



படிப்பகம்

www.padippakam.com

# நிலவு ஏன் தேய்கின்றது

நிலையற்ற வாழ்க்கையா
நீர்க்குமிழி போன்றது
நீர்க்குமிழி போன்ற வாழ்க்கை
பல காலம் நிலைக்குமா
நிலவு ஏன் தேய்கின்றது
நான் செய்த பாவமா
கனவு ஏன் கலைகிறது
நிஜங்களின் மகிமையா
ஒரு கூட்டுப் பறவை பல
இறக்கை முளைத்துப் பறந்துவிட
இறக்கை இருந்தும் பறக்கமுடியுமா
பறவையாக சில காலம்
கிட்டடியில் தெரிந்த வாழ்க்கை
விண்மீனாய் வெகுதொலைவில்
கண்சிமிட்டி நிற்கிறது நண்பனே
என் நிலையும் அப்படித்தான்
மலர்ந்த சிறு மலரும் மணம் வீச மறப்பதில்லை
விரைந்து வரும் பெருமலையும்
கரைசேர மறப்பதில்லை
தொலைந்த உன் வாழ்வும்
ஒளி வீசும் ஒரு நாளில்
அதுவரை காத்திருப்பாய்
உன்னத மனிதன் நீ.





படிப்பகம்

www.padippakam.com



# வேண்டுதல்

இறைவன் என்று எமை ஆளும் சக்தியே
பணிந்து யான் வேண்டுகிறேன்
பணம் பொருள் புகழ் இவையெல்லாம் வேண்டாம்
பட்டினியற்ற பசுமை வாழ்வு வேண்டும்

கடந்து போன அப் பாடசாலை
வாழ்வில் கண்ணீர் கறைகளே
இல்லாத இனிய தினங்களில்
ஒரு நாளை மீட்டுத்தர வேண்டும்

பள்ளிச் சீருடையுடன் பளிச்சிட்ட எம் தோழனுடன்
துள்ளலும் துடிப்புமே துணையாக வர
குறும்பும் குறுஞ்சிரிப்பும் கோலமெனக் கொண்டு
குதூகலித்த அவ்வினிய
தினங்களில் ஒரு நாளை எனக்கு தருவாயா?

●



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# பறவைகள் பறக்குமா...?

ஊன்று கோல்கள்
விலையேறி
உயர்வாகி விட்டது
மண்ணிலே
சுவடுகள்
குறைந்தே போகின்றது
முடக்கப்பட்ட
வாழ்வில்
முடங்கிப்போன
பறவைகள்
முகம் சுழிக்காமல்
முட்தரை மேலே
முழுநிலவாய்
தெரிகின்றது
இவரை பாடுவதற்கு
யாரும் இல்லை
பகிர்வதற்கும்
பேனாக்கள் இல்லை
இவர்கள் வாழ்வது
பேய்வீடு இல்லை
மகிழ்வின்
மனவாசல்
மலர்களின் முழுவாசல்
சதுரங்க ஆட்டத்திலே
மூடப்பட்ட
பெருவாசல்
என்றுதான்
திறக்குமோ...?
எப்போது இப்பறவைகள்
பறக்குமோ...?

●



படிப்பகம்

www.padippakam.com



# ஏழைகள் நாங்கள்

என் அத்தை மகன்
அவதிப்பட்டான் நோயினால்
அலறினான் என் அத்தையை
அழைத்துச் சென்றேன் நோய்தீர்க்க

அங்கே மாத்திரைக்கு மட்டும்
ஆயிரம் ஆகுமாம் மருத்துவர்
எங்கு செல்வோம் ஏழைகள் நாம்

ஆனாலும் ஓயவில்லை
நம்பிக்கையுடன் அழைத்துச் சென்றேன் கோவிலுக்கு
ஆராதனைக்கு ஐந்நூறு வேண்டுமாம் ஐயர்
எங்கு செல்வோம்
ஏழைகள் நாம்

●



படிப்பகம்

www.padippakam.com



# விரைகிறோம் விடியலுக்காய்

எழுத முனையும்
  எழுத்துக்களை
எழுத முடியாது
  எத்தனிக்கிறது
என் கைகள்
  எத்தனையோ சோகம்
என் மனதில் இருந்தும்
  ஏதிலியாய் உலகில்
எரிகிறேன் நான்
எண்ணங்கள் பல
  எனக்கிருந்தும்
எரிந்தே போகிறேன்
  என் தாயவள் பிரிவால்
என்றோ ஒரு நாள்
  எமக்கொரு விடிவு
ஏறிடும் என்ற
  எதிர்பார்ப்புடன்
எழுந்தே செல்கிறோம் நாம்

●



படிப்பகம்

www.padippakam.com



# மெழுகுவர்த்தி

அன்பெனும் தத்துவத்தினை
புகட்டும் ஆசானாய்
தரணியில் தலை நிமிர மெழுகுவர்த்தியாய்
தனை உருக்கியவளே
ஆயிரம் ஆண்டுகள் எடுத்தாலும்
காலடியில் இருப்பேன் உன் மகனாய்...

●



படிப்பகம்

www.padippakam.com



# மாரியில் மலர்ந்திடும் பொழுது

மலர்கள் சிரித்திடும்
மாரி காலம் – பூத்த
மலர்களோ ஏராளம்
வளமின்றிப் போன மண்
வளமாகும் காலம்
பூக்களின் மனதில் எல்லாம்
கோடி இன்பம்
பூமியில் மாந்தர்
புன்னகைக்கும் காலம்
மலர்களின் மனமாய்
எங்கள் மனங்கள்
பூந்தோட்டப் புன்னகையின்
புதிய பாதையில்
புது வாழ்வு தனை நோக்கிப்
புறப்படும் புயல்கள்

●



படிப்பகம்

www.padippakam.com

# இசை பாடும் நிலம்



வன்னி வயல்கள்
வற்றிய குளமாய்
மலரப் போகும்
மலர்களை எதிர்பார்த்து
இயற்கை வர்ணங்கள்
இளைப்பாறாமல் விழித்தபடி

விவசாய செய்கைக்கு
விலைமதிப்பில்லை
இரும்பு வியாபாரிகள்
மண்ணைக் கிளறுவதால்

களைப்பாறாமல்
தொடர்கிறது
பக்தி வணக்கம்
இடிக்கப்பட்ட
கோயில்களை நோக்கி..
இனி இசை பாடப்
போகிறது தாய்
வன்னி நிலம்
இயற்கையின்
மாயைக்குள் பல்லிழித்து
இனிய தமிழ் செழித்திட

●



படிப்பகம்

www.padippakam.com

# இறைவன்

சுனாமியால்
சிதைக்கப்பட்ட கோயிலில்
சிலைகளைத் தேடினார்கள்
குருமார்கள்
இறந்த குழந்தையின்
பூவாடை மணந்து

பூக்களைக் கொய்து
தாய்
மாலையைச் சூட்டிவிட்டு
என் பிள்ளையின்
கையாலே இறைவா
உனக்கு இம்மாலை
என்றால்.
பூக்கள் கேட்டது
புன்னகையை உதிர்த்துவிட்டு
இறைவனின் கையால்
இறைவனுக்கு
மாலையா என்று.

●



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# முகாம் வாழ்வு

ஏன் குடும்பம் தெருவானிலே
உருக்குலைந்து விட்டது
என் வாழ்வு என்ன செய்வது இனிதான்
ஒவ்வோர் நிகழ்வினையும் கண்டு

அன்று நிம்மதியாய் இருந்தவன்
ஒரு வசந்த காலத்தில்
கால் வயிறு கஞ்சிக்கும் வழி இல்லை
இன்று பிணமாக இருக்கின்றான்
சில்லு வண்டியிலே பிதற்றிக் கொண்டு

குண்டு சிதறலால் நடக்காமல்
செய்து விட்டனர் இவனை
என்ன பாவம் செய்தவன் இவன்
கடவுளே நரகமான வாழ்க்கையில் ஏன் தான்
இப்படி செய்தாய்

கணவனை பறிகொடுத்த தன் தமக்கையையும்
தான் காதலித்து கட்டிய தன் மனைவியையும்
கண் கலங்காமல் காப்பாற்றியவன் இன்று
ஊமையாய் இருக்கிறான் இவன் மனைவி
கஸ்ரப்படுவதைப் பார்த்து

எப்படி இருக்கும் இவன் மனம்
வறுமையான வாழ்க்கையிலும் வருவதும்
இவனுக்கு சோகம் தான்
ஏன்ன செய்வது இனி தான்
பெற்ற தன் குழந்தையின்
மனதை மகிழ வைப்பதற்காக
தன் மனதை அடக்கி
தாலாட்ட வைத்திருக்கின்றான்

பஞ்சு எண்ணுகின்றது தூக்கி ஓட மாட்டரா
என கதைக்க முடியா விட்டாலும்
தன் விழிகளால் கேக்கிறது
என் செய்வான் இவன்
எரிகின்றது நெருப்பு இவன் மனதினிலே
நடுத்தெருவுக்கு தள்ளப்பட்டு விட்டான்
இனி இவன் வாழ்வு
ஏக்கத்தோடு மனதை
கட்டுப்படுத்தி தன் குழந்தையை
தூக்கி வைத்திருக்கின்றேன

●



படிப்பகம்

www.padippakam.com

## நிலவு

எல்லையற்ற மகிழ்வை
இதயத்தில் விதைத்து
இமயச் சோகமதை
இருளுக்குள் புதைத்து
ஆகாய வெளிக்குள்
அழைத்துச் செல்லும்
மருந்து.

●



படிப்பகம்

www.padippakam.com



# பெண்

அட்டைப் படத்திற்கு
மெருகூட்டும் பெண்ணினம்
கவிதை என்றால்
இவளே முன்னிடம்
ஆண் போதைக்கு மட்டுமா?
இது உயிரினம்
இல்லையே..

அன்னை என்ற அவதாரம்
இவள் அன்புக்கு இல்லை
நிகரேதும்.
பொறுமையிலே இவள்
புகழாரம் பூமிக்கே
பெண் உயிர்க் கோலம்

●



படிப்பகம்

www.padippakam.com



# அண்ணாவின் பாசம்

அண்ணா ஒரு வார்த்தை
சொல்லிவிடு
சிறகடித்த பறவைகளாய்
நாம் இருந்தோம்
மகிழ்வுச் சிறை ஓடிந்ததால்
உனைப்பிரிந்தோம்
அழகான மனையிருந்தும்
மகிழ்வான இடமிருந்தும்
பாசமான உறவிருந்தும்
தனித்து விட்டேன்
அண்ணா நீ இல்லை
என்பதால
தீச்சுடர் மேனியும் – குளிர்ந்திடும் நாள்
தீபங்கள் மணங்களில் ஒளிந்திடும் நாள்
பூக்களின் புதுமைகள் அறிந்திடும் நாள்
அலைகளில் பாடல்கள் ரசித்திடும் நாள்
வானத்தில் எல்லைகள் கண்டிடும் நாள்

●



படிப்பகம்

www.padippakam.com

# உன் பார்வையில்

வேல் விழியால் பெண் என்று
பெரியார்
வெறுமைக்குச் சொல்லவில்லை
பசுமைக்குத்தான் என்று
உன் பார்வையில் நறுமணம் கொண்டேன்

தாகத்தின் குளமாய்
தன்னிகரில்லாப் பெண்ணினமாய்
நீயடி என்று தாகம் தீர்த்தேன்
உன்பார்வையில் நானே.

செங்கடல் அழகைப் பெண்
நெற்றியில் பார்ப்பாய்
செவ்வரத்தை இதழ்களை அவள்
விரல்களில் காண்பாய் என்று
கவிவடித்து என்தாயே
உன் விழி பார்த்தேன்
என்னுடல் சிதைத்தே இறந்தேன்
உன் சோக இராஜ்ஜியம் கண்டு.

●



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

# துயரம்

கொடுமைகளைப் பாருங்கள்
என் தோழனுக்கு நடந்ததை
என்ன செய்வது நான்
எப்படிச் சொல்வது ஆறுதல்
பத்து மாதம் கருவில் சுமந்தவளை
பறி கொடுத்ததற்குச் சொல்லவா அல்லது
பாசம் வைத்த தந்தையை இழந்ததற்குச் சொல்லவா
குருவிக்கூடு போல இவன் வாழ்வு
குலைந்ததைப் பற்றியதைச் சொல்லவா
ஏவிய எறிகணை இவன்
குரல்தனைப் பறித்ததை செல்லவா
இவன் வாழ்வு இருள் ஆனதைச் சொல்லவா ?
அழுது அழுது இவன் கண்ணில் இனி
கண்ணீர் இல்லை
ஓடி விளையாடும் வயதில்
முடங்கிக் கிடக்கின்றான் இவன்

நரகமான வாழ்வு தனில்
நடக்கின்றது கொடுமைகள்
மனத்திரையில் பசுமையாக வேர்
ஊன்றி நிற்கின்றன
இவன் வாழ்வில் ஏற்பட்ட கொடுமைகள்

தமிழர் என்ற சொல்லுக்காய்
இவனுக்குக் கிடைத்த பரிசு இது
ஓவ்வொரு நாளும் எண்ணுவான்
தமிழர்களாய் பிறந்த எல்லோருக்கும் ஏற்பட்ட
அழிவால் வெந்துபோய்க் கிடக்கின்றது
இவன் மனம்
வெளிச்சம் வராதா
இவன் வாழ்வில்...!

●



படிப்பகம்

www.padippakam.com

## விதி

தோல்வியின் உயர்வில்
உதிரும் புன்னகை.

## கண்ணீர்

எழுத்தாளர்களின் முத்துக்கள்
ஏழைகளின் சொத்துக்கள்

## கஞ்சி

சில காலம் வன்னி வாழ்மக்களின்
பசி அறிந்த படையல்.

●



படிப்பகம்

www.padippakam.com

# 01.07.2009 அன்று



மூன்று எனக்கு அதிஷ்ட
இலக்கம் – என்
அன்னையே..
நீ இன்று என்னை பார்த்ததும்
மூன்று வருடங்களுக்கு பிறகுதான்
கண்ணீராலே நீ என்னை வரவேற்றாய்
என் கண்களும் – என்னை
அறியாமல் கலங்கித்தான் போயிற்று
பேச்சுக்கு என்னை எடுக்க
என்னால் பெரும்பாடாய் போயிற்று
முத்தாய் நீ உதிர்த்த வார்த்தைகள்
பசுமையாய் மனதில் பொறிக்கப்பட்டுவிட்டது
அன்னையே..
காலச்சக்கரங்கள் நிச்சயம்
சுழலும் – எம்
வீட்டு முற்றத்தில் – நான்
தலை வைத்து உறங்குவேன்.

●





படிப்பகம்

www.padippakam.com

# சரிவு

கற்களின் நடுவினிலே
நிழல் தரும் பூந்தோட்டம்
கருவறை மடி தூங்கியும்
கவலையான நிமிடங்கள்
வாழ்க்கை வரலாற்றை
பகிர்வு கொள்ள மகிழ்வுகள்
சேவல் துயில் எழுப்பா
சொர்க்க பூமி
எழுத்துக்கள் வடிவிலே
தொடர்கின்ற உறவுகள்
ஒற்றுமையின் வாழ்வில்
ஓங்காரமாய்
ஒலித்தாலும்
எம்மில் பற்ற வைத்த தீ
குளிராக இருப்பிலும்
சட்டத்தின் சாவுக்குள்
நாங்கள்
சரிவுகளே.

●



படிப்பகம்

www.padippakam.com

# ஊர் போக வேண்டும்

உழவடிக்கும்
திருநாள்
சேறு குளிக்கும்
பெருநாள்

சிறகடிக்கும் சிறுவர்கள்
நாணில் கல் கொண்டு
குறிபார்த்து விட்டனர்
ஐய்யய்யோ அவலம்
அழகிய பறவைகளில்
ஒரு பறவை சிறகுடைத்து

சிரித்தார்கள் சிறுவர்கள்
கைகளிலே பறவை
சிக்கியே தவித்தது

என்னழகு பறவை என்று
மன்னவர்களும் வியக்க
மருத்துவம் பல பறவைக்கு
பரிமாற்றமாய்

தம்பியின் அன்புக்கு
கூண்டுக்குள்
சிலையாய் அசைந்தபடி
பறவை
ஊர் போக வேண்டும்
உயிருடன் வாழ்கிறது
சுதந்திரம் பேசும்
எழுத்தாணியின் வீட்டில்.

●



படிப்பகம்

www.padippakam.com



# கவி கண்ட கவி

வங்கக்கடலில்
வர்ணங்களைக் கோர்த்து
ஞாயிறின்
வரிகளில் தூரிகையை சேர்த்து
வசந்த காலத்தின்
வயிற்றறை சுவர் கிழித்து
வாள் முனையில்
தேனிமை பதித்து
பகலையும் இரவையும்
வேல் பார்வைக்குள் வைத்து
பசிசையும் ருசிசையும்
வாழ்க்கைப் பண்புகளில்
மறைத்து
மரணவாயிலை
மனதில் நிலைநாட்டி
வடித்த கவியினை
என் கவி பார்த்த போது
குற்றுயிராய் கவிதை
குறும்புச் சிரிப்புடன்
தாய்.

●



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# அழகு

பறவையின் சிறகோசை
இசையின் அழகு
பூக்களின் அசைவு
நடனத்தின் அழகு
இரவினில் நிலவு
உண்மையின் அழகு
உவகையின் உருவம்
பொய்கையின் அழகு
உறைவிட உயர்வு
வாசலின் அழகு
ஊமையின் மொழியே
சோகத்தின் அழகு
அழகு அழகு
உலகத்திலே எம்
ஆயிரமழகு
ஒரு நிமிடம்
நிறுத்துங்கள்
உண்மையழகு அது
புரியவில்லையா?
உன்னை நீ அறிதலே.



படிப்பகம்

www.padippakam.com

# நீச்சல்

வற்றாத குளத்தில்
வற்றிய நீர்
வாழ்க்கைக்குள்
சிறகடித்துப் பறக்கின்றது
கண்ணீர்.

அணையாத துயிலை
அணைக்கிறேன்
அம்புகளாய் சோகம்
ஆழ்கிறது

காகங்களுக்கு
உணவளித்த நாட்கள்
நினைவுகளில் மட்டும்
நினைவுகளாய்

நெறியாய் மகிழ்வுகள்
உயிர்வாழ்ந்த
நாட்கள்
குளமதிலே மீனாய் நான்
என்னுடல் நீர்
உருவாகக் கொண்டாலும்
தன்னுடன் அணைக்கும்
குளமாய் இருக்குமோ
ஆசை என்மனதில்
மீண்டும் மீனாய்
நான் மாற.

●



படிப்பகம்

www.padippakam.com

# கீழே பாருங்கள்

கலையின் வடிவங்களே
நீங்கள்
கவலை கொள்ளுங்கள்
கலைகள் இயமனின்
பாசக்கயிற்றில்

எழுதும் வரிகளே
ஒரு முறை எளிமை
கொள்வீர்களா
கிராம வேலிகள்
சுவர்களாவதற்கு

ஓ...
ஆல மரங்களே
உங்கள்
உயர்கிளைகளை
அசைத்துக் கொள்ளுங்கள்
ஒரு முறையாவது
அடியில் உள்ள
நல்மரங்கள்
வளர்வதற்கு.

●



படிப்பகம்

www.padippakam.com

## உண்மை வாழும் இடம்

நிர்வாண
உடல்கள்
மட்டும் நிலை பெறுகிறது
மனதில்
உண்மையை நினைக்கும் போது

உவமைகளைத் தேடுகிறார்கள்
கவியாளர்கள்
உள்ளம் எது என்பதை
கேட்பதற்கு

உருக்குலைந்த
சடலங்களுக்கு
உடமைகள் பூட்டப்படுகிறது
வண்டியின் இழுவை
மாடுகள்
இளைப்பாற முடியாமல்
நகர்ந்த வண்ணம்

சாவுகளின் முத்தத்தில்.
பிறப்பு.மேனியில் மட்டுமே
வடிவம் பதிக்கின்றன வரலாறுகள்

●



படிப்பகம்

www.padippakam.com

# ஒளிர்வு செய்வோம்

எழுத முனையும்
கவி வடிவங்கள்
எல்லாம்
என் முன்னோடிகள்
எழுதியே விட்டார்கள் – நான்
ஏழையாகி விட்டேன்
கவிக்கனி பறிப்பதில்.

எழுதப்பட்ட
வரிகளெல்லாம்
சிற்பத்தின் வடிவங்களாக
மிளிர்கின்றன
இருளுக்குள்ளே உயிர்கள்
வாழ்ந்து கொண்டிருக்கின்றது
இன்னும்

தூசுகள் தேடி
காற்றும் களைப்படைந்துவிட்டது
வரலாற்று மேனிகளெல்லாம்
தூசிகளின்
போர்வைக்குள்
சிறைப்படுத்தப்பட்டு
சிணுங்குகின்றது
கண்ணீரை மட்டும்
காதலித்தபடி

என்னுயிர் பேனாக்களே
உயிர்த்து விடுங்கள்
தூசுகளுடன் போர் புரிய
இருளுக்குள் நிலவை
இணைப்புச் செய்ய..

●



படிப்பகம்

www.padippakam.com

# நிம்மதி

உலக வாழ் உயிர்களிடம்
எது என்ற கேள்விக்குறியோடு
விடைதேடி
விதைக்கப்பட்டது
வார்த்தைகள்

துப்பாக்கிகள்
மனுக்களுடன் நிற்கின்றன
தன்னைப்பற்றும் கைகளை
வெறித்துப்பார்த்தபடி
கண்களில் உலாவுகிறது
அமைதி
சுடுகாட்டு சாம்பலை
இன்று உட்கொண்டு
உயிர் வாழ்ந்தபடி.

●



படிப்பகம்

www.padippakam.com

# அழிய முடியாத கவிதைகள்

கோபுரங்களும் குடிமனைகளும்
காணாமல்போனது
இரத்தத்துளிகளே எங்கும் படிவுகளாய்
சந்திர சூரிய உடல்கள்
உயிரற்றுக்கிடந்தது
உலர்ந்த காற்றில் கவிவடித்து
நாங்கள் சுவாசித்தபடி..

அத்தனையும் சோகங்களாய்
எம்மிலே பதிய
சுமக்க முடியாத சிலுவை ஒன்றை
சுமந்து கொண்டிருந்தோம்.

●



படிப்பகம்

www.padippakam.com

# பதிந்து போன சுவடுகள்

தூர பார்வைக்கு
தூது விடும் மனம்
வேர் அற்ற மரத்தில்
வௌவால் குஞ்சுகளும்
பொய்கை தேனில்
நீந்திய சுவடுகள்
நிம்மதி இழக்கப்பட்ட வாழ்வை
நிறுவியே தந்தது.
கோயில் வாசலோடு
சுடுகாட்டு நிலம்
சுத்திகரிக்கும் தூதுவராய் நாங்கள்.
ஆற்று வெள்ளங்களில்
ஆழியாத சுவடுகளாய்
பார்வைக் கனிகள்
பல்லிளிக்கின்றன
உதாரண உவமைகளுக்கு
உயிர் கொடுக்க

●



படிப்பகம்

www.padippakam.com



# என் கானம்

பூந்தோட்டம் எங்கும் புயல்காற்றின் ஈரம்
என் வாழ்க்கை கானம் உன்னையே பாடும்
செந்தாமரை நீயாகிறாய்
செவ்வானமே நீ என் உயிராகின்றாய்
காற்றெழுந்து பாட்டுச் சொல்லும்
கவிதைகள் உயிரை அள்ளும்
உன் பெயரை சொல்லிவிட்டால்
உலகமே கைகள் தட்டும்
கண்மணியே கண்மணியே என் விழிகள் நீயம்மா
என் வாழ்க்கை எனும் வானத்திலே
நிலவும் நீயம்மா
ஊர்க் குருவி பாடும் பாடல்
உன் காதில் கேட்கிறதோ
காதலில் மௌனம்தான்
இன்றுவரை வாழ்கிறதோ

●



படிப்பகம்

www.padippakam.com

# மனிதா நீ மாறிவிடு

உருளையின் ஓர் வடிவமாய்
உருவெடுத்த இவ் உலகில்
ஆனந்தச் சிட்டுக்களாய்
சுழல்கின்ற மனிதா

முற்றத்தில் ஒளிந்திருந்தது
முள்ளாக மாறாதே
வெளியுலகம் காண வேண்டும்
வேண்டாம் உன் பிடிவாதம்

பூப்போன்ற உன் மனதை
கல்லாக மாற்றாதே
மனிதனாக பிறந்தவர்கள்
மண்ணுலகம் கண்டுதான் ஆகவேண்டும்

சாரல் நீர் குளிர்வது போல்
குளிர வேண்டும் உன் உள்ளம்
தன்னம்பிக்கை உனக்கு வேண்டும்
துவண்டு விடாதே உலகை எண்ணி



சிலந்தியைப் போல் உன்கைகள்
தேடவேண்டும் முயற்சிதனை
அன்பு என்னும் ஓர் உலகில்
சுற்ற வேண்டும் நாம் எல்லாம்

மத பேதம் வேண்டாமையா
நல்லவனாய் நீ நம்பு
சுற்றத்தை நீ நம்பு
சுதந்திரமாய் திரிந்திடாமல்
அனைவரும் ஒன்றிணைந்து
உயர்ந்திடுவோம்
நம் நாட்டை உலகமே வியந்திடவே

●



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# உறவு...

என்ன தெரியும் இவளுக்கு
ஏக்கத்தோடு எதைப் பார்க்கின்றாள் இவள்
அன்னையைத் தேடி
பல இரவுகளாய் தூக்கத்தைக் கெடுத்து
தூக்கம் வரவில்லையாம்
இவளது பிஞ்சு மனம் வெம்புகின்றது

தாய்ப் பால் குடிக்கும் வேளை
பச்சைத் தண்ணீர் ஊட்டுகிறார்கள்
பால்மாவும் வாங்க வசதி இல்லாமல்
பெற்ற மனம் இப்படிச் செய்யுமா
தனக்குள்ளே எண்ணுகின்றாள்
வெளியில் எப்படிச் சொல்வது இவள் வாழ்வினை
வளர்ப்புத் தாய் புலம்புகின்றாள்
பசிக்கும் குழந்தைக்கு பால்மா இல்லை என

தமிழர்கள் வாழ்வே தலைகீழாய் போய்விட்டது
தவிக்கும் குழந்தைக்கு அன்னை இல்லை
பசிக்கும் பாலுக்கும் பணம் இல்லை
காலம் செய்த வேலையால் கண்மூடி விட்டனர்
இவள் உறவுகள்

காலம் செல்கின்றது
இன்னும் விடிவில்லை இவளுக்கு
விடிவு எப்போ கிடைக்கும்... இவள் வாழ்வு தனில்
கொஞ்சம் உதவுங்கள் இவள் வாழ்வுக்கு.

●



படிப்பகம்

www.padippakam.com

## பாடசாலை

வெட்டை வெளி
வெள்ளழகை
வென்றிடும் கோலம்.
சித்திரங்களின்
கைகளில்
சிரித்திடும் காலம்.
ஓளவையின் வரம்பில்
பதித்திடும் கோல்.
வள்ளுவரின் வரிகளில்
நிமிர்ந்திடும் தூண்.
மாயை இருளை
மறைக்கும் ஒளி
இறப்பிற்கு உயிர்வை
பிறப்பிற்கும் வழி – இங்கு
வெண்மைகள் இசைத்திடும்
கீதங்கள்.
அவர் வாழ்க்கையின் எல்லை
தூரங்கள்.
போற்றிடும் இக் காலம்
மனம் அளவிட முடியாத நீளம்.

●



படிப்பகம்

www.padippakam.com

# எதிர்கால உலகம்

எரிகின்ற
கற்பூரமாய்
வர்ணம்
விளையாடும் பந்தாய்
உலகம்.
நிறுவையற்ற
தராசுகளில்
நிறுவைகளாக நீதி:
வரையப்பட்ட
சித்திரம்
வர்ணம் இன்றித் தவிக்கிறது.
உலக வர்ணம்
மாசாகிப்போகிறது.
ஈசல்களின்
வாழ்வாய்
உயிர்களின்
வாழ்வும்
எதிர்கால உலகமதிவரம்.
பாவம் அல்லவா
நாங்கள்
சிறுவர்கள்
நாளை பெரியவர்கள்

●



படிப்பகம்

www.padippakam.com

# வேண்டாம் கண்கள்

இறைவன் ஏன்
கண்களைப் படைத்தான்
உலகப் பார்வைக்கோ
வேண்டாமடா இறைவா.
கண்கள்
எல்லோரையும் குரடாக
படைத்துவிடு
பிரம்மா
உன்னிடம் இதை
பிச்சை கேட்கின்றேன்

காயத்திலும் கவலைகள்
உண்டு
கரு சிதைக்கும் காயம்
காதல் காயமே
வாடிய பூவானாலும்
மீண்டு எழும்
வரலாற்று மனிதனில்
வாழ்க்கை காலம்
காதலை ஒதுக்குமா?
காதல் கண்களைத்தான்
பார்க்குமா...

வேண்டாமடா
இறைவா வேதனைகள்
கண்களை எல்லாம்
எடுத்துவிடு
இல்லையானால்
இவ் உலகத்தை நீ
அழித்துவிடு

●



படிப்பகம்

www.padippakam.com

# புதுமைக் கனவுகள்

முயற்சிகள் இன்றி
கனவு காணும் மானிடமே
கற்பனையின் உருவில்
நீ விளைவதாக எண்ணாதே
கரைந்து போகும் உனது வாழ்க்கை
கனவு காண்பது பெரிதல்லை
அதை நகர்த்துவதே பெரிது
போதும் நீ கண்ட கனவின்
போலி வேசங்கள்
இனியும் வேண்டாம் – இந்த
கற்பனை வாழ்க்கை
முகத்தில் படிந்துள்ள கனவுகளை அகற்றி
புதுமைகள் படைக்க கனவுகளை அகற்றி
புதுமைகள் படைக்க நீ முனைந்திடு.

●



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# ஓத முடியவில்லை....

ஒதுக்க முடியவில்லை கல்வியை
ஓதவும் முடிய்வில்லை
ஒற்றை மரநிழலினிலே ஒய்யாரமாய்
அமர்ந்தாலும்
பொய்மைகள் ஒளியுமட்டும்
கல்வியை ஓதவே முடியவில்லை

வாழ்விழந்து போனதும்
எம்வளம் இழந்துபோனதும்
வற்றாது நதியாய் – எம்
மனதிலே ஊற்றெடுக்க
நரம்பறுத்த வீணைகளும்
மெல்லிசைகள் இசைக்க
ஓதவே முடியவில்லை
கல்வியை ஓதவே முடியவில்லை

இறந்தாலும் ஓதுகின்றோம்
பூமியிலே சூரியனை
கருத்தரிக்க தாய்மைகளை வேண்டுகின்றோம்
எம்
வீட்டுக்குள்ளே மழை நீரும்
விளையாடி திரிவதால்
பாடப்புத்தகங்களும் தாகம் தீர்த்து
கொண்டதால்
பொய்மைகளும் உயர்வாகி
பூவாகி புலர்வதால்
பூமியிலே சூரியனை
கருத்தரிக்க வேண்டுகின்றோம்

வெள்ளை உடை தரித்து
வேற்றுமைகள் களைபவர்கள்
வேண்டுகோளே
விடுக்கின்றோம்
எம்மைச் சுற்றி
வேலிகள் வேண்டாம்

அன்னையவள்
முகம் மலர
பள்ளிக்கூடம்
அனுப்பும் வரை
ஓதவே முடியவில்லை
எம்மால் கல்வியை
ஓதவே முடியவில்லை
எம் கண்கள்
மூடியவண்ணமே
இன்றும்

●



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# வலிமை

வல்லூறுகள்
பார்வையினில்
சிக்கிய காலங்கள்
சிறகிருந்தும்
மறக்காமல்
தவிக்கின்ற நேரங்கள்
எல்லாமே என்
கண் முன்னே விரிவாகினும்
என் அலையான மனதிற்கும்
ஒரு கரை உண்டு
என் அழகான இறக்கைக்கும்
வலிமைகள் உண்டு.

●



படிப்பகம்

www.padippakam.com

# அமைதி

துப்பாக்கிகள்
மனுக்களுடன் நிற்கின்றன,
தன்னைப் பற்றும் கைகளை
வெறித்துப் பார்த்தபடி,....

கண்களில் உலவுகிறது
அமைதி,

சுடுகாட்டு சாம்பலை
இன்று உட்கொண்டு
உயிர் வாழ்ந்த படி.



படிப்பகம்

www.padippakam.com

# உறுதி

உடைக்கப்பட்ட எம்
வீடுகளும்
உருமாறிய எம்
வாழ்க்கையும்
துவண்டு போகும்
துன்பம் தந்தாலும்
புலர்வான மனம்
எம்மில் உள்ளவரை
நாங்கள் புழுதிகள்
களையும்
மழை நீரே..

●



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# நிழல் மரங்கள்

எம் வாழ்க்கையிலே
நிம்மதி இல்லை
எமக்கு
நிழல்தரும் மரங்களின்
வாழ்வே இல்லை
பட்டமரம் விறகாகும்
பசும் மரமே நிழலாகும்
பார்வைகளே...
நீங்கள் சொல்லுங்கள்
நாங்கள் எந்த மரங்கள் – எம்
கவலை களைவீரா
எம் கண்ணீர் துடைப்பீரா
இருந்தும் நாம்
காத்திருக்கின்றோம்.
நிழல் மரங்களுக்காக...

●



படிப்பகம்

www.padippakam.com

# உன்னை அறி...

துவண்டு போகும்
நெஞ்சங்களே
கொஞ்சம் நில்லுங்கள்
இந்தச் சின்ன மலர்கள்
சொல்லும் பாடம் கேட்டுச் செல்லுங்கள்

வாழ்விழந்து போனாலும்
வழி மாறா மனம் வேண்டும்
மனம் மாறிப் போனாலும்
நல் எண்ணம் தான் வேண்டும்

மழைநீர் மதம் பார்த்து
எமை நனைப்பதில்லை
சூரியனோ இனம் பார்த்து
கதிர் பரப்புவது இல்லை

இடம்பெயர்ந்த எம் வாழ்வு
இருளாகிப் போவதும்
பறிக்கப்பட்ட கல்வி
அடியோடு மாள்வதும்
எம் கையில் தான்
எமக்கே புரிகிறது

உன்னை நீ அறிந்தால்
உலகம் உனக்கு
உன்னை நீ மறந்தால்
நீயே எதற்கு
உன்னாலே நீ உயர்வாகிறாய்
உன்னாலே நீ அறிவாகிறாய்
புரிந்திடு
இனியாவது
உன்னை நீ புரிந்திடு..

●



படிப்பகம்

www.padippakam.com

# மனமெனும் வெண்மை

எம் இதயங்களில்
ஏற்பட்ட வலிகள்
துவண்டு போன
நினைவலைக்குள்
துளிராகும்
கனவுகள்
நனவுகள் ஆவது
நாடாம் அல்ல
எம்
எதிர்கால வாழ்க்கையில்
உயிர்த்தடம்

சிதைக்கப்பட்டது
எம் வாழ்க்கை
சிதைக்க முடியாதது
உண்மை – அதுவே
எம் மனமென்னும்
வெண்மை

●



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# புறப்படு

புதையுண்டு போனாலும்
துளிராக எழுவது எம்மினம்
முட்கம்பி சூழ்ந்தாலும்
எம் மனதில்
முட்களைத்தான் பதித்தாலும்
எம் நிலம் மீது
தடம் பதிக்கும் போது
என் வீரம்
எனக்கு உயர்வு..
தமிழன் என்று சொல்லி
தடம் பதித்த நாட்கள்
ஓய்ந்து போனதாக ஒரு போது கொள்ளாதே
தூய்மை கொண்ட உன்மனம்
உலகிற்கு தீபம் ஏற்ற வேண்டும்
இருள் மீண்ட உன்
வாழ்வில் – நீயே
ஒளி ஏற்ற வேண்டும்.
புறப்படு புதிய வாழ்வு நோக்கி

செயற்படு
உண்மைக்கு மட்டும்
உயிர் கொடுத்து
நீ வாழ இல்லாவிடினும்
உன் நிகழ்கால
சிட்டுக்கள் வாழ
நாளைய உலகின்
மொட்டுக்கள்
உண்மை
இசை பாட....

●



படிப்பகம்

www.padippakam.com



# தொடரும் மானிடம்

தெய்வங்கள் உண்டென்று
தொடர்கிறது மானிடம் – இதை
நம்பி தொலைவாகி போன
மனித வாழ்க்கைகள் ஏராளம்
உயிரற்ற இவைகள் குடிகொள்ள
மனைகள் ஏராளம் – இங்கு
உயிருள்ள இவர்கள் வாழ
உயிரற்ற சிலைகள் வாழ இடம் கொடுத்த உலகமே
உயிருள்ள இவர்கள் வாழ  இடம் கொடுப்பாயா..
இருக்கிறதோ சிறு கூடாரம்.

●



படிப்பகம்

www.padippakam.com



## தருமம்

வையக மனிதர்கள்
நோயுற்ற நேரத்தில் மட்டும்
வைத்தியசாலையை நாடுவர்
ஆனால் எம் தமிழ் மக்களின் வாழ்க்கையோ
வைத்திய சாலையே வாழ்வாகிப் போகிறதே
புரிய முடியவில்லை இந்த உலகம்
அறியாத உண்மையை
மனிதன் ஏற்படுத்திய கூடாரம்
இவர்களுக்கு இடமளிக்கவில்லை
மரத்தின் நிழல்களே
இவர்களுக்கு தருமமாகிப் போகிறது.

●



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# கலங்கரை விளக்கம்

தென்னை மரஞ்சோலை – ஆங்கே
தென்றல் கிழித்து கோடிட்ட
மணல்வெளி
இளங்காற்றும் இனிதே
இளைப்பாறும் கடல்வெளி
பரப்பிட்ட நிலமெல்லாம்
தொடுமளவு வான்வெளி
தொட்டுயர வேண்டு மென்று
சிட்டுக்களாய் மனிதர்களும் ஆங்கே
திசைகளெல்லாம் எமக்கானதாய்

கடல் அலை படகு மேல்
கோபமாய் மோத திசை
திரும்பியது படகு மட்டுமல்ல
படகினுள் இருப்போர் வாழ்வுமோ
சிறந்ததோர் கட்டிடம் அது
கலங்கரை விளக்கமே..

●



படிப்பகம்

www.padippakam.com

## வானைத் தொடாத மேகங்கள்

மானிடராய்ப் பிறந்த நாம் வாழ்க்கைப் பயணத்தை ஏதோ ஒரு புள்ளியில் ஆரம்பித்தே ஆக வேண்டும். ஆரம்பிக்கும் புள்ளி காற்புள்ளியாகி, அரைப்புள்ளியாகி, முக்காற் புள்ளியாகி மீண்டும் முற்றுப் புள்ளியை அடையும் வரை மனித வாழ்வில் எத்தனை எத்தனை போராட்டங்கள்.

இயற்கையின் அனர்த்தங்களாலும் போரின் கொடூரப் பிடியினாலும் உள ரீதியிலும் பௌதீக ரீதியிலும் இடிந்து போன எமது சமூகம் இன்று ஊசலாடுவதனை கண் கொண்டு பார்த்திட முடியவில்லை.

பால் மணம் மாறாத பிஞ்சு தாய் மடி தேடி ஏமாறும் கொடுமைகள், மார்புச் சேலை நனைய, மார்போடு அணைத்த சேயைத் தொலைத்த தாயின் குமுறல்கள், தொலைந்த உறவுகளைத் தேடித் தேடித் தேய்ந்து போன பாதங்களின் வடுக்கள், சிறுவர் போராளிகள் என்ற முத்திரையில் கேள்விக் குறிகளை ஸ்வரங்களாக்கி விடியலை தேடிப் பூபாளம் இசைத்திடுவோர், அநாதைகளாக்கப்பட்டவர்கள், அங்கவீனமாக்கப்பட்டவர்கள், தனிமைப்படுத்தப் பட்டவர்கள், முதியவர்கள் என கை விலங்குகளுடன் நடமாடும் மானுடர்களின் உலகம் ஒன்று. இவர்களுக்கு மத்தியில் உறவுக்கு கைகொடுத்து மீள் எழுச்சி செய்திட ஓடித் திரியும் சில உண்மை மனிதர்கள்...

போராட்டங்கள் முடிந்தும், முடியாமல் தொடர்வது சிறுவர்களின் மனப் போரராட்டங்களே. நாளைய விடியலைக் கட்டி எழுப்பும் தூண்கள் சிறுவர்கள். தாயின் கருவறையிலிருந்து உருவாகி 18 வயது வரையுள்ள அனைத்து மனிதப் பிறவிகளும் பாதுகாக்கப்பட வேண்டிய சிறுவர்களே. சட்டத்தின் முன் இவர்கள் குற்றவாளிகளும் இல்லை. போராளிகளும் இல்லை. குற்றவாளிகளாக்கப்பட்டவர்கள், அவ்வாறு சிறுவர் போராளிகள் என சுட்டி இனங்காணப்பட்டு பூந்தோட்டம் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் இருக்கும் சிறுவர் போராளிகளின் உலகத்துக்குள் இறங்கி அவர்கள் உணர்வுகளுடன் சங்கமமாகிய போது....

இங்கு அம்மா, அப்பா என இராணுவ பொறுப்பதிகாரிகளை பாசத்துடன் அழைத்து சகோதரத்துவத்துடன் உறவாடி மகிழும் இச் சிறுவர்கள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனர்.

1. கல்வி கற்கும் சிறுவர்கள்
2. தொழிற்பயிற்சி பெறும் சிறுவர்கள்

இவர்களுள் கல்வி கற்கும் சிறுவர்கள் தற்போது ரத்மலானை இந்துக் கல்லூரியில் தம் கற்றலை தொடர்கின்றனர். ஏனையோர் தையல், அழகுக்கலை, விவசாயப் பயிற்சிகள் என தொழிற் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இச் சிறுவர்களுக்குள் கலைப்படைப்புகள் ஊடாக இச் சமூகத்தை கட்டி எழுப்ப கலைக்குழு நண்பர்கள் இணைந்து 'கலைச் சூரியன்' என்ற பெயரில் பிரகாசிக்கின்றனர். இக் கலைச் சூரியன் நண்பர் வட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு திறமைசாலிகள்.

இச்சிறுவர்களுள் பாடசாலை செல்லும் சிறுவர்கள் மட்டும் ரத்மலானை செல்லும் போது ஏனைய சிறுவர்கள் அவர்களை வழியனுப்பிய காட்சி மனதை மிகவே நெகிழச் செய்தது. பிரிவின் வேதனை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் சிறிது கால மயான அமைதியைக் கொடுத்திருந்தது. ஒன்றாக இருந்து தட்டிப் பறித்து உண்டு களித்த இவர்கள் பிரிவின் வலியை இப்போது கேட்டாலும் கூறுவார்கள்.

பிள்ளைகளின் குழப்படிகளை கண்டு அவர்களை நேர் வழிப்படுத்தும் தந்தை கண்டிப்புடன் வழி நடத்துவது வழமை. அந்த கண்டிப்புடன் கூடிய வழி நடத்தலை இங்கும் காண முடிகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

பிள்ளைகள் சரியான வழியைப் பின்பற்ற வேண்டும். வெளியே செல்லும் போது புனர்வாழ்வில் நாம் கற்றுக் கொண்ட ஒழுக்கம் இதுவென ஒவ்வொரு பிள்ளையும் எதிர்காலத்தில் சிறந்த ஒழுக்க சீடர்களாக திகழ வேண்டும். இதுவே எனது எண்ணம் என்கின்றார் 'அப்பா... சேர்...' என இப்பிள்ளைகளால் அன்புடன் அழைக்கப்படும் மேஜர் வீரசேகர.

எதை இழந்தாலும் நம்பிக்கையை இழக்காத இவர்களது மனத் துணிவு இவர்களுக்கே உரிய ஒரு பலம். றஜிதா என்ற சிறுமி அதற்கு நல்ல எடுத்துக்காட்டாக உள்ளார்.

மிதிவெடி அகற்றல் பயிற்சியின் போது இச்சிறுமி 2 கைகளையும் மணிக்கட்டுக்கு சற்று மேலாக இழந்ததுடன் ஒரு கண்பார்வையையும் முழுமையாக இழந்து கால்களில் எரிகாயங்களுடன் உள்ளார். தாயை சகோதரங்களை இழந்த போதிலும் நம்பிக்கையை இவர் இழக்கவில்லை. விரல்களை இழந்த இவள் முன்னங்கைகளால் பேனாவைப் பிடித்து முத்தான எழுத்துக்களை எழுதுகின்றாள். கணணியில் Keyboard இல் விரல்கள் விளையாடுவதனைத் தான் நாம் பார்த்துள்ளோம். இவளோ விரல்களை இழந்த கைகளால் Keyboard ஐ இயக்குகின்றாள். இவையும், அவள் mouse பிடிக்கும் அழகும் அவளை ஒரு சாதனைப் பெண்ணாகவே காட்டுகின்றன.

இச்சிறுவர்களை மகிழ்விக்க பொழுது போக்கு நிகழ்வுகள், கேளிக்கைகள் அவசியம். ஆனால் இச் சிறுவர்களே கேளிக்கைக்குரியவர்களாக மாறி விடக் கூடாது. இப்பொழுதுபோக்கு நிகழ்வுகள் இவர்களை மீளக் கட்டி எழுப்ப அவசியமானதாக அமைய வேண்டும். சமூகத்தில் நாங்களும் ஒரு அங்கம் என்ற உணர்வுடன் செயற்படத் துடிக்கும் இவர்களது உணர்வுகளும் மதிக்கப்பட வேண்டும். வாழ்வெனும் புத்தகத்தில் இவர்கள் முதற் பக்கத்திலேயே நிற்கின்றார்கள். தொடர்ந்து வளரும் இவர்களது வாழ்க்கைப் புத்தகம் பசுமை நினைவுகளை மட்டும் பதிந்திடட்டும்.

இவர்கள் சந்தர்ப்பவசத்தால் சிறுவர் போராளிகளாக்கப்பட்டவர்களே தவிர குற்றவாளிகள் அல்ல. நாளைய சமூகத்தை கட்டி எழுப்ப வேண்டிய தூண்கள். இவர்களை வெறும் காட்சிப் பொருளாக மட்டும் நோக்காது இவர்களுடன் நாமும் ஒன்றிணைய வேண்டும்.

அனர்த்தங்களால் இருண்டு போன எமது நாட்டுக்கு ஒளி கொடுக்க அனைவரும் சகோதரத்துவத்துடன் இணைந்து வானைக் காட்டுங்கள்.... இவர்களும் சிறகு விரித்திடட்டும்.

**கே. சுபாஷினி**
சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்
வவுனியா



படிப்பகம்

## விடியலைத் தேடி

வண்ணக் கனவுகளைச் சுமந்த சின்னக் குழந்தைகள் இன்று, காலஞ் செய்த கோலத்தால் திசை மாறிய படகுகளாய் சென்றடையும் இடம் அறியாது பரிதவித்த வேளையிலே, கரை சேர வைக்க இறைவனால் தரப்பட்ட கலங்கரை விளக்கமென, இந்துக் கல்லூரி அதிபர் ஆசிரியர் சமூகம் கை கொடுத்தது. கண்ணீரில் கரையும் நினைவுகளால் கருகிய முகங்களுடன் காணப்பட்ட மண்ணின் மைந்தர்கள் கார் முகிலைக் கண்டு களிநடம் பயிலும் மயிலெனவே உளம் குளிர்ந்தனர். கால மாற்றத்தில் ஏற்பட்ட காயங்களால் இரணமான அவரிதயங்கள் இந்துக் கல்லூரியின் அதிபர் ஆசிரியர் சங்கத்தினரின் இன்சொற்களும் இனிமையான ஆறுதல்களும் இதயத்திற்கு வலுவூட்ட புதிய பூங்காற்றினைச் சுவாசித்தபோது விடியல்கள் தேடும் பறவைகளாய் விரித்து நிற்கும் விண்ணை நோக்கினர்.

தாய் தாலாட்ட, தந்தை சீராட்ட , ஊர் பாராட்ட பிறந்த மண்ணை விட்டு எங்கோ தொலை தூரத்தில் காணப் போகும் கல்லூரி, கல்விக்கும் வாழ்வுக்கும் வழி காட்டுமா? என்ற ஏக்கத்துடன் பயணப் பைகளை விட இதயச் சுமைகளே பாரமாகத் தோன்ற இரத்மலானை நோக்கி வந்தனர்.

கல்லூரி மண்ணில் கால் பதித்து புதிய முகங்களைக் கண்டபோது கல்லூரி முன்றிலில் வீற்றிருக்கும் கற்பக விநாயகர் ஆலயம் அவர்களுக்குத் தெம்பை அளித்தது. உடலால் வேறு பட்டாலும் உதிரத்தால் ஒன்றுபட்ட உறவுகள் கனிவுடன் கை நீட்டி வரவேற்றபோது ‘இறைவன் இன்னும் இருக்கின்றான்’ என்று பூங்காற்று அவர்கள் காதோரம் செய்தி சொல்லிற்று. உள்ளக் கிடக்கைகளை விழிநீரால் இறைத்து இதயச் சுமைகளை இறக்கி வைக்கும் ஆலயமாக இந்துக் கல்லூரி விளங்கியது.

கல்வியே நிலையானது என்றெண்ணி கருத்துடனே புத்தகத்தைப் புரட்டுகையில் வேதனை ஈட்டிகள் இதயத்தைத் தைக்க இழந்து விட்ட உறவுகள் கண் முன்னே வந்து நிழலாடி, வேதனை வதைகள் விழுந்து விருட்சமாகி சிந்தைனைக்கு இடையூறாகும்போது அறிவுரைகள் பல கூறி ஆதரவாய் அணைத்து ஆசான்கள் கல்விச் செல்வத்தை வழங்குவர்.

வாழ்வின் விடியலைத் தேடி வந்த மண்ணின் மைந்தர்கள் சிலர் கல்லூரி தந்த அரவணைப்பால் இயல்பான வாழ்க்கைப் படிகளில் அடியெடுத்து வைத்தபோதும் இன்னுஞ் சிலர் இத்தகைய சூழலுக்கு இயைவு பட இன்னுஞ் சில காலஞ் செல்லும்.

கடவுள் கை கொடுக்க கனவுகள் கனியும் நாளை எண்ணி ஏங்கித் தவிக்கும் இவர்கள் விடுதலைச் சிறகை அகல விரித்து விண்ணில் பறக்கும் நாள் விரைவில் வர வேண்டும். கல்வி கை கொடுத்து காலமெல்லாம் வழி நடத்த விடியல்கள் விரைவில் வர வேண்டும். கற்பக விநாயகர் இவர்களைக் காலமெல்லாம் காக்க வேண்டும். கருணை மழை பொழிய வேண்டும்.

**அதிபர், ஆசிரியர்கள்**
இரத்மலானை இந்துக் கல்லூரி

www.padippakam.com




சர்வதேச சிறுவர்தின அழைப்பிதழ் ஓவியம்

படிப்பகம்

பூஜைப் பொருட்களுடன்....




www.padippakam.com

போரின் பல்வேறு கோரமுகங்களைச் சந்தித்த சிறுவர்களின் படைப்புக்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகிறது.

நாம் இச்சிறுவர், சிறுமியரைச் சந்தித்தபோது அவர்களில் சிலரிடம் காணப்பட்ட உளநலம் சம்பந்தமான பிரச்சினைகளை மேஜர் வீரசேகர எம்மிடம் கலந்துரையாடி அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொண்டார். பொதுவாக இச்சிறுவர்களினது பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் தன்மை அல்லது பிரச்சனைகளைக் கையாளும் திறனானது குறைந்திருக்கலாம் எனப் பலர் எதிர்பார்த்ததை நாம் அவதானித்திருந்தோம்.

ஆனால், இச்சிறுவர்களிடம் நாம் உரையாடியபோது, அவர்களிடம் காணப்பட்ட தன்னம்பிக்கையும், எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளும் எமக்கு மகிழ்ச்சியூட்டின. இச்சிறுவர்களை நாம் சந்திக்கும்போது வேலைக் களைப்பினை உணராது, அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினோம். உண்மையில், பல்வேறுபட்ட வேலைப்பளுக்களுக்கு மத்தியில், இச்சிறுவர்களுடன் வேலை செய்வதென்பது வைத்தியர்களுக்கும் உளவளத் துணையாளர்களுக்கும் மகிழ்ச்சியையும் தொழில் சார்ந்த திருப்தியையும் அளித்தது.

இவர்களில் பலரிடமிருந்த அற்புதமான ஓவியத்திறமையை வெளிக்கொணரும் விதத்தில் எமது உளநலப்பிரிவானது சர்வதேச சிறுவர் தினத்தன்று ஒரு ஓவியக் கண்காட்சியையும் நடாத்தியிருந்தது. இவர்களது படைப்புக்களை உளநல வைத்திய நிபுணர் எஸ். சிவதாஸ் ஒரு புத்தகமாக வடிவமைத்து வெளிக்கொணர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இவர்களில் பலர் தமது குடும்பத்தில் அல்லது உறவினரில் ஒருவரையேனும் இழந்தவர்கள். எல்லோருமே தமது சொத்துக்களை இழந்தவர்கள். இவையெல்லாம் இருந்தபோதும் இச்சிறுவர்கள் கூறுகிறார்கள் “வானத்தைக் காட்டுங்கள், சிறகை விரிப்போம்..”

**டாக்டர் சி. சுதாகரன்**
உளநல மருத்துவர்
மாவட்டப் பொது வைத்தியசாலை
வவுனியா

www.padippakam.com




ஒரு மனிதனில் பல கலைகள்
பாசி படிந்த பவளம் போல பொதிந்திருக்கும்.

கலைகள் உலகத்தின் விழிகள்.
மனிதன் மகிழ்வாக வாழ்வதற்கும்,
அவன் மனிதனாக வாழ்வதற்கும் கலைகளே
அவனை இயக்கும் கருவிகளாக இருக்கின்றன..
அந்தக் கலைகள்
உலக ஓட்டத்தின் அச்சாணியாக
மனித மனங்களில் உறுதியாகப் பிறக்கின்றன.

"காற்றுள்ளவரை கவிதைகள் வாழும்
கருங்கல்லும் அதன் உயிராகும்" என்பதற்கு நிகராக
"வானைக் காட்டுங்கள், சிறகு விரிக்க..."
என்ற இந்தக் கவிதைத் தொகுதி வெளிவருகிறது.

சின்னச் சூரியன்கள் ஒளி வீசிச்
சிறகு விரிக்கின்றன என்னும் செய்தி
பாலைவனத் தரையிலே
குளம் ஒன்று இருப்பதான மகிழ்வைத் தருகின்றது.

சின்னச்சிறு கலைஞர்களாகிய
எங்களின் எழுதுகோல்களின்
சிதறல்கள்களை
தொட்டிலிலே இட்டுத் தாலாட்டும்
எமது கலையின் தந்தையான
டாக்டர் எஸ். சிவதாஸ் அவர்களுக்கு
எங்கள் எழுதுகோல்களைத் தாழ்த்தி
நன்றி கூறுகின்றோம்

பூந்தோட்டச் சிறார்கள்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

துளிர்த்தல்

வையகத்துப் புலர்வு
வாழ்க்கைக்கு ஒளி வீசும்
மெழுகு...

இயற்கைக்குத் தடைகளை
இயற்றத்தான் முடிந்தாலும்
இறுக்கிக் கொள்ள முடியாது

வாழ்க்கையிலே வரும்
ஆயிரம் தடைகள்..
அதை உடைத்தால்தான்
கிடைக்கும் விடைகள்.

வெளியீடு:
மனநல மருத்துவப் பிரிவு
மாவட்டப் பொது வைத்தியசாலை
வவுனியா.

அனுசரணை:
வன்னி உள சமூக இணையம்

ISBN: 978-955-52407-0-3
9 789555 240703

படிப்பகம்